Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

தினத்தளம்
PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
ISO : 9001:2015; QT-57977/1125

செய்தியாளர்கள் தேவை
தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 106 | திங்கள் Monday | 16.02.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# சோழிங்கநல்லூரில் புதிய தகவல் தொழில்நுட்பக்கட்டிடம்

## முதலமைச்சர் ஸ்டாலின் திறந்து வைத்தார்



சென்னை: சோழிங்கநல்லூர் எல்காட் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் ரூ.84.42 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய தகவல் தொழில்நுட்பக் கட்டிடத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், "முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 13.02.2026 அன்று தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் சென்னை சோழிங்கநல்லூர் எல்காட் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் 84.42 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள எல்காட் தகவல் தொழில்நுட்பக் கட்டிடத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்), தமிழ்நாடு முழுவதும் உலகத்தரம் வாய்ந்த புதிய தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை உருவாக்குதல், தகவல் தொழில்நுட்பத் துறை வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி மற்றும் ஓசூர் ஆகிய நகரங்களில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை (SEZ) எல்காட் நிறுவியுள்ளது.

சென்னை, சோழிங்கநல்லூர் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் 2.33 லட்சம் சதுர அடி பரப்பளவில் 84.42 கோடி ரூபாய் செலவில் தரை மற்றும் பத்து தளங்களுடன், சிறிய, நடுத்தர மற்றும் பெரிய நிறுவனங்களுக்கு ஏற்ற வகையில் கட்டப்பட்டுள்ள எல்காட் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இந்த தகவல் தொழில்நுட்ப கட்டடத்தின் மூலம் சுமார் 3,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

இப்புதிய தகவல் தொழில்நுட்பக் கட்டடம், ஒருங்கிணைந்த கட்டட மேலாண்மை அமைப்பு, 24X7 பாதுகாப்பு வசதிகள், பசுமை மின் சக்தி பயன்பாடு, நீர் மேலாண்மை கட்டமைப்பு என பல வசதிகளுடன் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் பயன்பாட்டுக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் திரு. நா. முருகானந்தம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வணிகவரி துறை சார்பில் ரூ.34.98 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 5 வணிக வரி அலுவலகக் கட்டடங்கள், பதிவுத்துறை சார்பில் ரூ.22.12 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 12 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் உள்ளிட்டவற்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'முதல்வர் மு.க. ஸ்டாலின் 13.02.2026 அன்று தலைமைச் செயலகத்தில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை சார்பில் 57 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 வணிகவரி அலுவலகக் கட்டடங்கள், 12 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் திருப்பூர் பதிவு மாவட்டத்தில் பொங்கலூர், தாம்பரம் பதிவு மாவட்டத்தில் வண்டலூர், கள்ளக்குறிச்சி பதிவு மாவட்டத்தில் வாணாபுரம் ஆகிய புதிதாக உருவாக்கப்பட்ட மூன்று புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

மாநிலத்தின் வரி வருவாயில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் பங்களிக்கும் முக்கிய துறையாக வணிகவரித்துறை விளங்கி வருவதோடு, வரி வசூல் மற்றும் வரி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனையும் உறுதிசெய்து வருகிறது. மேலும், பதிவுத்துறை வாயிலாக மக்கள் தங்கள் சொத்துக்களின் மீதான உரிமையை தமது பெயரில் பதிவு செய்தல், திருமணத்தைப் பதிவு செய்தல், சங்கங்கள், சீட்டுகள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்கள் பதிவு செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயல்பாடுகளை மேலும் மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

வணிகவரித் துறை சார்பில் திருச்சிராப்பள்ளி ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம், அருப்புக்கோட்டையில் உதவி ஆணையர் அலுவலகக் கட்டடம், மன்னார்குடி, நாகப்பட்டினம் மற்றும் கரூர்-4 ஆகிய இடங்களில் மாநிலவரி அலுவலர் அலுவலகக் கட்டடங்கள் என மொத்தம் 34 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 வணிகவரித் துறை கட்டடங்களை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

# ஓம் பிர்லாவை நீக்குவதற்கான தீர்மானம் மீது மார்ச் 9ந் தேதி விவாதம், வாக்கெடுப்பு; கிரண் ரிஜிஜூ அறிவிப்பு



புது டெல்லி: மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீதான விவாதம் மற்றும் வாக்கெடுப்பு மார்ச் 9 அன்று நடைபெறும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

அருணாச்சலப் பிரதேசம் மேற்கு மக்களவைத் தொகுதியில் செய்தியாளர்களிடம் பேசிய கிரண் ரிஜிஜு, "மார்ச் 9 ஆம் தேதி மக்களவையில், சபாநாயகருக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீதான விவாதத்தை நடத்துவோம். முதல் நாளே நம்பிக்கையில்லா தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வது விதி. விவாதத்திற்குப் பிறகு வாக்கெடுப்பு நடைபெறும். பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாம் பகுதியில் மக்களவையில், ஐந்து அமைச்சகங்களில் மானியக் கோரிக்கைகள் குறித்து விவாதிப்போம், மாநிலங்களவையில், மற்ற ஐந்து அமைச்சகங்களின் செயல்பாடுகள் குறித்து விவாதிப்போம். மேற்கு வங்கம், தமிழ்நாடு, அசாம் மற்றும் கேரளா ஆகிய நான்கு மாநிலங்களிலும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளதால் பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாம் பகுதி சுவாரஸ்யமாக இருக்கும்.

அப்போது ஒரு மிக முக்கியமான மசோதா உட்பட சில முக்கியமான மசோதாக்களை நாங்கள் கொண்டு வருவோம். மசோதா என்ன என்பதை நாங்கள் இப்போது வெளியிட மாட்டோம். ஆனால், இந்த மசோதாக்கள் அனைத்தையும் நாங்கள் நிறைவேற்றுவோம். விவாதத்தில் எதிர்க்கட்சிகள் பங்கேற்கவில்லை என்றால், அது அவர்களின் இழப்பாக இருக்கும். எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையில் விரிசல் ஏற்படக்கூடும். ஏனென்றால் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தில் திரிணமூல் காங்கிரஸ் கையெழுத்திடவில்லை. பெரும்பாலான கட்சிகள் அவையை முடக்குவதை ஆதரிக்கவில்லை. குறிப்பாக சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்னதாக அவர்கள் தங்கள் பிரச்சினைகளை அவையில் எழுப்ப விரும்புகிறார்கள்" என்றார். பட்ஜெட் கூட்டத்தொடர் ஜனவரி 28 அன்று நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவரின் உரையுடன் தொடங்கி பிப்ரவரி 12 அன்று முடிந்தது. 2026 ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் பிப்ரவரி 1 ஆம் தேதி சமர்ப்பிக்கப்பட்டது. மேலும் பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாம் பகுதி மார்ச் 9 ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 2 ஆம் தேதி முடிவடையும்.

# அதிமுக கூட்டணி என் வாழ்வின் மன்னிக்க முடியாத பிழை; ஈரோட்டில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ பேட்டி




ஈரோட்டில் நடைபெற்ற மதிமுக மண்டலத் தேர்தல் நிதியளிப்பு கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அக்கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ, தனது அரசியல் வாழ்வில் தான் செய்த மிகப்பெரிய தவறுகள் குறித்து வெளிப்படையாகப் பேசி தொண்டர்களிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தினார்.

கூட்டத்தில் பேசிய வைகோ, கடந்த காலங்களில் தான் எடுத்த சில அரசியல் முடிவுகள் கட்சியின் வீழ்ச்சிக்கு எவ்விதம் காரணமாக அமைந்தன என்பதைப் பட்டியலிட்டார். நான் கடந்த காலத்தில் சில பிழைகளைச் செய்திருக்கிறேன், அதை இங்கே பகிரங்கமாக ஒப்புக்கொள்கிறேன். என் அரசியல் வாழ்வின் நம்பகத்தன்மையைச் சுக்குநூறாக்கியது அதிமுகவுடன் கூட்டணி அமைத்ததுதான். 19 மாதங்கள் என்னைச் சிறையில் அடைத்த அதிமுகவுடன் உடன்பாடு வைத்தது, நான் எடுத்த மிகத் தவறான மற்றும் மன்னிக்க முடியாத முடிவு. மேலும், இமயம் போல் உயர்ந்திருக்க வேண்டிய மதிமுக, அதிமுக கூட்டணியால் பாதாளத்திற்குச் சென்றது. அரங்கேற்றம் திரைப்பட நாயகி போல என் நிலைமை ஆகிவிட்டது என தனது மனவேதனையை வெளிப்படுத்தினார். கட்சியின் வளர்ச்சி குறித்துப் பேசிய அவர், 1994-ல் நடிகர் விஜய்க்கு வரும் கூட்டத்தை விட பல மடங்கு கூட்டம் எனக்கு வந்தது. ஆற்று வெள்ளம் வடியது போல, தோல்விக்குப் பிறகு மதிமுக வடிந்து போய்விட்டது. ஆனால், அது தவறில்லை; மீண்டும் நாம் எழுவோம் என தொண்டர்களுக்கு நம்பிக்கை ஊட்டினார்.

2026 சட்டமன்றத் தேர்தல் குறித்துப் பேசிய வைகோ, மதிமுகவின் தற்போதைய அரசியல் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார். திமுகவுடன் தோழமை கொள்வது என முடிவெடுத்த பிறகு, நாங்கள் எவ்வித நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. மற்ற கட்சிகள் நிபந்தனை விதிப்பது அவர்களது உரிமை. தமிழகத்தில் மதிமுகவைப் போல கூட்டணி தர்மத்தைக் கடைபிடிக்கிற கட்சி வேறெதுவும் இல்லை. திமுக ஆட்சிக்கு எவ்வித குந்தகமும் விளைவிக்காமல் நாங்கள் உறுதுணையாக இருப்போம்.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தமிழகத்தில் பிப்.23ந் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு



தமிழ்நாட்டில் இறுதி வாக்காளர் பட்டியல் வரும் 23ஆம் தேதி வெளியிடப்படும் என்று தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்திய உச்சநீதிமன்றத்தால் WP(C) எண் 1072/ 2025 மற்றும் 1145/ 2025 ஆகிய வழக்குகளில் 29.01.2026 அன்று வழங்கப்பட்ட உத்தரவுகளின் அடிப்படையில், இந்தியத் தேர்தல் ஆணையமானது, 30.01.2026 அன்று வெளியிட்ட கடித எண் 23/ SIR/ 2026/ ERS -ல், "முரண்பாடுகள்" (Logical Discrepancies) என்ற பிரிவில் இடம்பெற்றுள்ள நபர்களின் பெயர் பட்டியலை கிராமப் பஞ்சாயத்து அலுவலகங்கள், பொது இடங்கள் மற்றும் தாலுக்கா/ துணை பிரிவு அலுவலகங்கள், நகரப் பகுதிகளில் உள்ள வார்டு அலுவலகங்கள் உள்ளிட்ட இடங்களில் வெளியிட வேண்டும் என்று அறிவுறுத்தியது.

மேலும், இம்முரண்பாடுகள் பிரிவில் பாதிக்கப்படக்கூடிய நபர்கள், முரண்பாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 10 நாட்களுக்குள், உரிய விளக்கத்துடன் தங்களது ஆவணங்களை / மறுப்புரைகளை நேரில் அல்லது தங்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி (வாக்குச்சாவடி முகவர்கள் உட்பட) மூலமாக சமர்ப்பிக்க அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் ஆணையம் அறிவுறுத்தியது.

இதற்கமைவாக, இந்திய உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி முரண்பாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டு, அடுத்த 10 நாட்களுக்குள் தொடர்புடைய நபர்கள் தங்களது ஆவணங்களை / மறுப்புரைகளை சமர்ப்பிக்க அனுமதிக்கப்பட்டனர்.

தற்போது, 01.01.2026-ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சிறப்பு தீவிர திருத்தம் (Special Intensive Revision - SIR) தொடர்பான இறுதி வாக்காளர் பட்டியல் 23.02.2026 அன்று வெளியிடப்படும். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். முன்னதாக தமிழகத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் வரும் 17ஆம் தேதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில் தற்போது பிப்.23ஆம் தேதிக்கு தள்ளிப்போய் உள்ளது.



தேவகோட்டை சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் சதுரங்க பயிற்சி நடைபெற்றது. ஆசிரியை முத்துலெட்சுமி வரவேற்றார்.பள்ளி தலைமை ஆசிரியர் லெ .சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். சர்வதேச அளவில் நடுவராக சதுரங்கத்தில் பணியாற்றும் பயிற்சியாளர் அதுலன் லேப்டாப் மூலமாக இணையத்தில் மாணவர்கள் சதுரங்க பயிற்சி எடுக்க கற்றுக் கொடுத்தார்கள்.மாணவர்களின் பல்வேறு சந்தேகங்களுக்கு பதில் அளித்தார்கள் .நிறைவாக ஆசிரியர் ஸ்ரீதர் நன்றி கூறினார்.

## கோவை பந்தயசாலையில் உள்ள தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக

# தேவேந்திர இலக்கியமன்றம் சார்பாக எஸ்.சி. பட்டியல் வெளியேற்ற கோரிக்கை தொடர்பாக நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டம்



தேவேந்திர இலக்கிய மன்றம் அமைப்பின் சார்பில், தமிழக அரசை வலியுறுத்தி கவன ஈர்ப்பு கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டம் கோவை பந்தய சாலையில் உள்ள தெற்கு வட்டாட்சியர் அலுவலகத்தின் முன்பாக நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தேவேந்திர இலக்கிய மன்ற நிறுவனரும், முன்னாள் வணிகவரி துணை ஆணையருமான காசிமைந்தர் பழனிச்சாமி தலைமை தாங்கினார். தொடர்ந்து நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில்,மத்திய மாநில அரசுகள், தேவேந்திர குல வேளாளர்களை எஸ்.சி பட்டியலில் இருந்து விடுவித்து, எம்.பி.சி பட்டியலில் சேர்த்திட வேண்டுமெனவும், தற்பொழுது உள்ள எஸ்.சி பட்டியல் இட ஒதுக்கெட்டில் 18 சதவீதத்தில், ஆறு சதவீகித இட ஒதுக்கீட்டை, எம்.பி.சி பட்டியலில் சேர்த்து,அதில் தேவேந்திர குல வேளாளர் சமூக மக்களுக்கு உள் ஒதுக்கீடாக அமலாக்கிட அரசாணை பிறப்பித்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். மேலும் இந்திய நாட்டின் பிரதமர், தமிழக முதல்வர், தமிழக அரசின் டெல்லி பிரதிநிதி,தமிழ்நாடு அரசின் பட்டியல் பழங்குடியின நலத்துறை கூடுதல் செயலாளர், மற்றும் ஒன்றிய அரசின் எஸ்சிஎஸ்டிநலஆணையர், என பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகளிடம், இது குறித்து மனுக்களாகவும், கோரிக்கைகளாகவும் வழங்கி உள்ளதாகவும், உடனடியாக மத்திய மாநில அரசுகள், சாதி வாரி கணக்கெடுப்பு எடுக்கும் காலம் வரையிலும்,உத்தேசமாக ஆறு சதவிகித இட ஒதுக்கீட்டை, எஸ்சி பட்டியலில் இருந்து நீக்கி, தேவேந்திர குல வேளாளர்களுக்கு எம்.பி.சி பட்டியலில் இணைத்து உள் ஒதுக்கீடாக வழங்க வேண்டும் கோரிக்கை இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில துணை தலைவரும், வழக்கறிஞருமான புஸ்பாணந்தம், அசோக், அந்தியூர் காமராஜ்,வளரும்தமிழகம்கட்சிசந்திரன், செந்தில், லாரன்ஸ், வளரும் தமிழகம் கட்சி சுந்தர்ராஜ், வழக்கறிஞர் சிவக்குமார், செந்தில், பேரூர் ரத்தினம், ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி, புலியகுளம் அறிவழகன், புலியகுளம் பிரபு,பாக்யலட்சுமி, ரேஷன் கடை கோபி,ஓய்வு பெற்ற இன்கம் டாக்ஸ் ஊழியர் ரமேஷ், பட்டக்காரர் தெய்வராசு, டாஸ்மாக் மணிமாறன்,அரசு ஊழியர் சங்க தலைவர் ஆறுமுகம், சதாசிவம், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



கன்னியாகுமரி மாவட்டம் : மகாசிவராத்திரியை முன்னிட்டு ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்ட சிவாலய ஓட்டம் இன்று துவங்கியது. இதில் தீயணைப்பு துறையின் சார்பில் மாவட்ட அலுவலர் சத்திய குமார் உத்திரவின் பெயரில், தக்கலை நிலைய அலுவலர்ஜீவன்ஸ்மேற்பார்வையில்,சிவபக்தர்களுக்குஏதேனும்தீங்குஏற்படும் பட்சத்தில் மீட்பு பணிக்காக, தீயணைப்பு மற்றும் மீட்பு கருவிகள் அடங்கிய துறை வாகனத்துடன் தக்கலை நிலைய வீரர்கள் தயார் நிலையில் உள்ளனர்.



கோடியக்கரை வன உயிரின சரணாலத்தில் கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்ட ஒரு குழுவினர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் ஆணைக்கு இணங்க ஈரோடு மாநகர் பரிமளம் மஹாலில் ஈரோடு கிழக்கு, மேற்கு சட்டமன்ற தொகுதி இளைஞர் அணி நிர்வாகிகள்ஆலோசனைக்கூட்டத்தில்தமிழ்நாடுவீட்டுவசதிமற்றும்மதுவிலக்கு ஆயத்தீர்வைதுறைஅமைச்சர்சு.முத்துசாமிகலந்துகொண்டுசிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் கே.இ.பிரகாஷ் (MP),ஜோயல்,பிரகாஷ்,ஈரோடுகிழக்குசட்டமன்றஉறுப்பினர்வி.சி.சந்திரகுமார், கழக மாநில மாவட்ட நிர்வாகிகள்,மாநகர செயலாளர் மு.சுப்ரமணியம், ஈரோடு மாவட்ட அமைப்பாளர் ஜெ. திருவாசகம், மாநகர அமைப்பாளர் கே.டி.சேந்த புகழன்,பகுதி கழக செயலாளர்கள்,மாவட்ட, மாநகர இளைஞரணி அமைப்பாளர்கள், மற்றும் பகுதி இளைஞர் அணி, வட்டக் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



## கோவை இடையர்பாளையம் அடுத்த தச்சன்தோட்டம் உள்ளிட்ட பகுதிகளில் சாலைகள் சீரமைக்கும் பணிகளை துவக்கி வைத்த மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன்

கோவை மாவட்டம் இடையர் பாளையம் சாலை தச்சன் தோட்டம், பகுதியில் மாநகராட்சிக்கு உட்பட்ட கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு,மத்தியம் ஆகிய 5 மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில், ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில், 204 எண்ணிக்கையிலான சாலைகள் சீரமைக்கும் பணிகளுக்கான பூமி பூஜை நிகழ்ச்சி நடைபெற்றது.கோவை மாநகராட்சி மேயர் ரங்கநாயகி, மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு இந்த பணிகளை துவக்கி வைத்தனர்.

தொடர்ந்து சம்பந்த பட்ட அதிகாரிகளிடம் பணிகளை விரைந்து முடிக்கவும், தரமானதாகவும் இருக்க வேண்டும் என்றும் கேட்டு கொண்டனர்.இந்த நிகழ்ச்சியில், கவுன்சிலர்கள் சம்பத், தமிழ்செல்வன், கரு பழனியப்பன், மாநகர தலைமை பொறியாளர் விஜயகுமார், உதவி ஆணையர் துரைமுருகன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கது.

## கோவை கவுண்டம்பாளையம் பகுதியில்

# மகாலிங்கங்கபுரம் ஸ்மார்ட்சிட்டி எனும், பிரீமியம் வீட்டுமனை திட்டத்தின் துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது



கோவை கவுண்டம்பாளையம் பி அன்ட் டி காலனி பகுதியில், நியூ கோவை ரியல் எஸ்டேட் நிறுவனம்சார்பில்,மகாலிங்கங்கபுரம் ஸ்மார்ட் சிட்டி எனும் பிரீமியம் வீட்டு மனை திட்டத்தின் துவக்க விழா நடைபெற்றது.

இத்திட்டத்தை சக்தி நிறுவன குழுமங்களின் தலைவர் மாணிக்கம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு துவக்கி வைத்தார்.மேலும்,யுனிவர்சல் ரேடியேட்டர்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் மகேஷ் மாதவன் இவ்விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார் அப்பொழுது அவர் கூறியதாவது.. முன்னணி தொழில் முன்னோடிகளில் ஒருவரான அருட்செல்வர் டாக்டர் மகாலிங்கத்தால் தொடங்கப்பட்ட சக்தி குழுமம், சர்க்கரை, ஜவுளி, போக்குவரத்து, நிதி,காபி எஸ்டேட்,ரியல் எஸ்டேட் உள்ளிட்ட பல்வேறு வணிகங்களில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக மகாலிங்கங்கபுரம் ஸ்மார்ட் சிட்டி வீட்டு மனைகள், தற்போது அறிமுகம் செய்யபட்டுள்ளது,இந்த இடமானது மேட்டுப்பாளையம் சாலையிலிருந்து 1.3 கிலோமீட்டர் தூரத்திலும், தடாகம் சாலையிலிருந்து 2 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது என்றார். இங்கு சிறுவாணி குடிநீர் வசதி, தார்சாலை, தெருவிளக்குகள், இயற்கை சூழல், அடித்தள வடிகால் அமைப்பு, சுற்றுச்சுவர், மேம்படுத்தப்பட்டபூங்கா, பிக்கிள்பால் மைதானம், நடைபாதை உள்ளிட்ட பல நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், மாவட்ட நகரமைப்பு திட்ட ஒப்புதல் மற்றும் நில ஆவண ஒழுங்குமுறை அங்கீகாரம் பெற்ற திட்டமாகவும், வாஸ்து முறைக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட வீட்டு மனை பகுதிகளைக் கொண்டதாக அமைந்துள்ளது என்றார். இங்கு மொத்தமாக 53 வீட்டு மனைகள் கொண்ட இத்திட்டத்தில், பாதுகாப்பான மற்றும் அமைதியான சூழலில், நவீன வசதிகளுடன் குடியிருப்பதற்கான அடித்தளம் அமைந்துள்ளதாக தெரிவித்தார் விழாவில், பவுண்டேஷன் ஒன் குழுமத்தின் தலைமை பொறுப்பாளர் ராஜ்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிட த்தக்கது.

# ஈரோடு மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 17ம் தேதி சிறப்பு கிராம சபைக்கூட்டம்

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தகவல்



ஈரோடு மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 17.02.2026 அன்று முற்பகல் 11.00 மணிக்கு சிறப்பு கிராம சபைக்கூட்டம் நடைபெறவுள்ளது. கூட்டம் நடைபெறும் இடம் தொடர்புடைய கிராம ஊராட்சிகள் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும்.

ஈரோடு மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கலைஞரின் கனவு இல்லம் திட்டம் 2025-26 இலக்கினை அடைய தகுதியான பயனாளிகளை தேர்வு செய்யும் பொருட்டு சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது. அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சிறப்பு கிராம சபைக் கூட்டங்கள் முறையாக நடைபெறுவதைக் கண்காணிக்கும் பொருட்டு வட்டார அளவில் மற்றும் ஊராட்சி அளவிலான பற்றாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

## கீழ்பவானி LIIT OF 60T திட்டங்களின்போது நிபந்தனையின்கீழ் வழங்கப்பட்ட

# பூமிகளின் நிபந்தனையை நீக்கம் செய்து அயன்பட்டாவாக மாற்றம் செய்ய அரசாணை

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி அறிவிப்பு




ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஈரோடு, மொடக்குறிச்சி, கொடுமுடி, பெருந்துறை, சத்தியமங்கலம், கோபிசெட்டி பாளையம், நம்பியூர் மற்றும் பவானி வட்டங்களில், கீழ்பவானி LIIT OF 60T திட்டங்களின்போது நிபந்தனையின்கீழ் வழங்கப்பட்ட பூமிகளின், நிபந்தனையை நீக்கம் செய்து அயன்பட்டாவாக மாற்றம் செய்ய அரசாணை உரிய வழிகாட்டுதல்களுடன் வரப்பெற்றுள்ளது.

எனவே, கீழ்பவானி பாசன திட்டங்களின்போது வழங்கப்பட்ட,திட்ட நிபந்தனை பட்டாக்களை அயன்பட்டாவாக மாற்றக்கோரும் நில உரிமையா ளர்கள், நில ஒப்படை வழங்கப்பட்டதற்கான அசல் நில ஒப்படை ஆணை,பதிவுபெற்ற ஆவணங்கள்,பட்டா,சிட்டா, வில்லங்கச்சான்று மற்றும் இணையத்தில் கோரப்படும்விபரங்களுடன்,www.erode.nic.in/lbp/என்றஇணையவழியில்,திட்ட நிபந்தனை பட்டாக்களை அயன்பட்டாவாகமாறுதல்செய்ய விண்ணப்பிக்கலாம் எனவும், இது தொடர்பாக 18.02.2026 அன்று கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் கலந்து கொண்டு உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைர் தெரிவித்துள்ளார்.

# குமரி மாவட்ட எஸ்.பி.க்கு பெற்றோர்கள் கோரிக்கை



சமீப நாட்களாக குமரியில் புது விதமான போதை பொருட்கள் நடமாட்டம் காவல்துறையின் சோதனைகளில் சிக்குவதும் காவல்த்துறை அதற்கு கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதும் செய்திகள் மூலமாக தெரியவருகிறது.

நாகர்கோவிலில் ஒரு பிரபலமான கல்லூரி கலையரங்கம் பின்புறம் மறைவான பகுதியில் ஊசி மருந்துகள் கிடந்ததாக ஊடக செய்திகளில் காணமுடிந்தது. அதை பார்க்கும் போது மனதுக்கு பதைபதைப்பை ஏற்படுத்துகிறது.

கல்லூரி வளாகத்திலேயே இளைஞர்கள் டோதை பொருட்களுக்கு அடிமையாகி வருகிறார்கள் என்றால் எதிர்காலத்தில் குமரி இளைஞர்களின் நிலை என்ன என்பதை எண்ணி பார்த்தால் பெற்றோர்களுக்கு கல்லூரிகளுக்கு பிள்ளைகளை அனுப்பவே அச்சப்படக்கூடிய நிலைக்கு தள்ளப்படு வார்கள்.

ஆகையால் குமரி மாவட்டத்தில் குற்றம் இளைப்பவ ர்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிவரும் குமரி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்ஸ்டாலின்,சென்னை,கோவையை போன்று குமரி மாவட்டத்திலும் மாணவர்களின் விடுதிகளை திமீர் ஆய்வுகள் மேற்கொண்டு மாணவர்களிடம்போதைபழக்கம்ஏற்படாமல்தடுக்க நடவடிக்கை எடுக்க பெற்றோர்கள் சார்பாக மாணவர்களின் எதிர்காலம் கருதி கேட்டுக்கொண்டனர்.

# கோவை கணுவாய் கற்கிமலை ஈஸ்வரர் கருணாம்பிகை அம்மன் திருக்கோவில் கும்பாபிஷேகம், மகா அன்னதானம்



கோவை கணுவாய் அருள்மிகு கற்கிமலை ஈஸ்வரர் உடனமர் கருணாம்பிகை அம்மன் திருக்கோவில் திருக்குட நன்னீராட்டு பெருவிழா வெகுவிமர்சையாக நடைபெற்றது. யாகசாலையில் ஆறு கால யாகங்கள் நடத்தி கோவில் கோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில் சுற்றுப்பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து அனைவருக்கும் மகா அன்னதானம் நடைபெற்றது.

கோவை கணுவாய் பகுதியில் அமைந்துள்ளது பழமையான அருள்மிகு கற்கிமலை ஈஸ்வரர் உடனமர் கருணாம்பிகை அம்மன் திருக்கோவில் இக்கோவில் கோவில் புணரமைக்கப்பட்டு திருக்குட நன்னீராட்டு பெருவிழா 12 ஆண்டுகளுக்கு பிறகு விமர்சையாக நடைபெற்றது. மஹா கணபதி ஹோமத்துடன் திருக்குட நன்னீராட்டு பெருவிழா நிகழ்ச்சி தொடங்கியது.

அருள்மிகு குன்று பெருமாள் கோவிலில் இருந்து முளைப்பாரி மற்றும் தீர்த்தக்குடம் அழைத்து வருதல் நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து முதற்கால வேள்வி பூஜைகள் நடைபெற்றது. இரண்டாம் கால வேள்வி, மூன்றாம் கால வேள்விகள் நடைபெற்றது. 108 மூலிகைகளைக் கொண்டு வேள்வி நடைபெற்றது.

இதையடுத்து புனிதநீர் கலசங்கள் கோவிலைச் சுற்றி ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு. கோவில் கோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு திருக்குட நன்னீராட்டு பெருவிழா நடைபெற்றது.தொடர்ந்து கற்கிமலை ஈஸ்வரர் உடனமர் கருணாம்பிகை அம்மனுக்கு சிறப்பு அலங்கார பூஜைகள் நடைபெற்றது.

கோபுர கலசங்களுக்கு டிரோன் மூலம் பூக்கள் தூவப்பட்டது. கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் டிரோன் மூலம் புனித நீர் தெளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சுற்று வட்டாரங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து அனைவருக்கும் மகா அன்னதானம் வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை அருள்மிகு கற்கிமலை ஈஸ்வரர் உடனமர் கருணாம்பிகை அம்மன் அறக்கட்டளை நிர்வாக குழு, திருப்பணிக்குழு மற்றும் ஊர்ப்பொதுமக்கள் செய்திருந்தனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் (14.02.2026) அன்று மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பூபதி உட்பட பலர் உள்ளனர்.

# செங்காளிபாளையத்தில் அதிமுக முப்பெரும் விழா

## 1200 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள் PRG அருண்குமார் எம்.எல்.ஏ. வழங்கினார்



கோவை செங்காளிபாளையத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் கோவை வடக்கு மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் கிழக்கு ஒன்றியம்சார்பாகஅதிமுக நிறுவனர் எம் ஜி ஆர் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மற்றும் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோரின் பிறந்த நாளை முன்னிட்டு முப்பெரும் விழா மற்றும் 1200 குடும்பங்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கோவை புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர் கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் பி ஆர் ஜி அருண்குமார் கலந்து கொண்டு ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கு நலத்திட்டங்களை வழங்கினார். தொடர்ந்து அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது.

அனைத்து இந்திய அண்ணாதிராவிட முன்னேற்ற கழகத்தின் நிறுவனரும் முன்னாள் தமிழக முதல்வருமான எம் ஜி ஆரின் 109 வது பிறந்த நாள், தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78 வது பிறந்தநாள் மற்றும் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோரின் பிறந்தநாளை அ தி மு க வினர் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக கோவை செங்காளிபாளையத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் கோவை வடக்கு மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் கிழக்கு ஒன்றியம் சார்பாக முப்பெரும் விழா மற்றும் 1200 குடும்பங்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

முன்னாள் அசோகபுரம் ஊராட்சி துணைத் தலைவர் ஆடிட்டர் சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பெரியநாயக்கன்பாளையம் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே வி என் ஜெயராமன், முன்னாள் அசோகபுரம் ஊராட்சி தலைவர் ரமேஷ் ஆகியோர் முன்னிலைவகித்தார்.

சிறப்பு விருந்தினராக கோவை புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர் மற்றும் கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் பி ஆர் ஜி அருண்குமார் கலந்து கொண்டு அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த எம் ஜி ஆர் மற்றும் ஜெயலலிதா ஆகியோரின் திருஉருவப்படங்களுக்கு மலர்கள் தூவி மரியாதை செய்தார். அவருக்கு அ தி மு க வினர் மாலை மற்றும் சால்வை அணிவித்து சிறப்பான வரவேற்பளித்தனர்.

தொடர்ந்து பொதுமக்களிடம் பேசும்போது முன்னாள் முதல்வர்கள் எம் ஜி ஆர், ஜெயலலிதா மற்றும் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோரின் ஆட்சியில் தான் தமிழகத்தில் குடிகள் தோறும் மின் விளக்கு திட்டம், பொங்கலுக்கு வேஷ்டி, சேலை திட்டம், பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவு திட்டம், மாணவர்களுக்கு லேப்டாப், சைக்கிள் வழங்கும் திட்டம், தாலிக்கு தங்கம், மகளிர் இருசக்கர வாகனம், தொட்டில் குழந்தை திட்டம் உள்ளிட்ட ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள்கொண்டுவரப்பட்டதாக தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பாரதிய ஜனதா கட்சி கிழக்கு மண்டல தலைவர் சரவணகுமார், அதிமுக பெரியநாயக்கன்பாளையம் கிழக்கு ஒன்றிய வர்த்தக அணி செயலாளர் செல்வகுமார், இளைஞரணி துணை செயலாளர் விநாயகமூர்த்தி, எஸ் எஸ் குளம் மேற்கு ஒன்றிய தலைவர் வேலுச்சாமி, முன்னாள் வார்டு உறுப்பினர் பாலாஜி நகர் பார்த்திபன், பொருளாளர் மருதாசலம், சங்கர் நகர் சிவசாமி, நாகராஜ், பாஜக செல்வராஜ், கிளைக் கழக செயலாளர்கள் ஜெயபால், ஆனந்தன், பொரி செல்வராஜ், ஆட்டோ ஆறுமுகம், சசிகுமார், தேவராஜ், எம் ஆர் நாகராஜ், டாக்ஸி நாகராஜ், மோகன்ராஜ்,

அண்ணாச்சி ராமமூர்த்தி, இளைஞரணி ரங்கநாதன், பிரபு மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் தேவராஜ், எலக்ட்ரீசியன் தேவராஜ், ஜெயராஜ், பன்னாரி, பூசாரி பண்ணாரி, மாரிசாமி, அன்னலட்சுமி, ராணி, தேவராஜ், கோவிந்தன், வண்டிக்காரர் ராமசாமி, வாட்டர் மேன் தங்கவேல், நாகராஜ், பாலன், கனகராஜ், பூசாரி பொன்னுசாமி, டெய்லர் மாணிக்கம், அச்சுதன், கப்பல் பண்ணாரி, ரங்கசாமி, ரவிச்சந்திரன், ராஜேந்திரன், பாஜக மண்டல பொதுச் செயலாளர்கள் ஸ்ரீராம், வசந்தகுமார், மற்றும் நிர்வாகிகள் செல்வகுமார், சந்தோஷ், கிஷோர், சபரி, மகேஸ்வரன், கனகராஜ் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர். இறுதியில் ஐ டி விங் அசோகபுரம் அய்யன் பெருமாள் நன்றி கூறினார்.

முன்னதாக மக்களை மகிழ்விக்ககலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் எம் ஜி ஆர், ஜெயலலிதா ஆகியோரின் திரைப்பட பாடல்களுக்கு அவர்களைப் போலவே வேடம் அணிந்து நடனம் ஆடினர். பொதுமக்களிடையேசென்று நடனமாடிய எம் ஜி ஆர் வேடமிட்டவருடன் பெண்கள் குழந்தைகள் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். மேலும் சிறுமிகளின் பரத நாட்டியம் மற்றும் சாகசத்துடன் கூடிய கரகாட்டம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.




# தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் தென்காசி மாவட்டம் அச்சன் புதூர் கிளை சார்பில் தவ்ஹீத் எழுச்சி மற்றும் சமூக விழிப்புணர்வு பொதுக்கூட்டம்

## கிளை தலைவர் அஹ்மத் அலி தலைமையில் நடைபெற்றது

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் தென்காசி மாவட்டம் அச்சன் புதூர் கிளை சார்பில் தவ்ஹீத் எழுச்சி மற்றும் சமூக விழிப்புணர்வு பொதுக்கூட்டம் கிளை தலைவர் அஹ்மத் அலி தலைமையில் நடைபெற்றது இதில் மாவடட தலைவர் அப்துல் ஸலாம் ,செயலாளர் ஜலாலுதீன் ,பொருளாளர் அன்வர் சாதிக், துணைத் தலைவர் அப்துல் பாசித் துணைச் செயலாளர்கள் ஹாஜா மைதீன், பீர் மைதீன், செய்யதலி, முஹமதலி பிலால், அப்துல்பாஸித்,மற்றும்மருத்துவ அணி செயலர் குட்டி அப்துல்லாஹ் , மாணவரணி ரபீக்ராஜா,தொண்டரணி தாவூத்,வர்த்தகஅணி இனாமுல் ஹக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

இந்த பொதுக்கூட்டத்தில் TNTJ மாநிலதலைவர் R.அப்துல் கரீம் அவர்கள் *இதுதான் இஸ்லாம்* என்கிற தலைப்பிலும் மாநில செயலாளர் I. அன்ஷாரி அவர்கள் *சுதந்திர இந்தியாவில் நமது நிலை* என்கிற தலைப்பிலும் உரையாற்றினார்கள் நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் கலந்துகொண்ட இப்பொதுக்கூட்டத்தில் கீழ்காணும் முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்கள் கலந்துகொண்ட மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டன

தீர்மானங்கள்

முஸ்லிம்களுக்கு உள் இடஒதுக்கீடு உயர்த்தி வழங்குக*

தமிழகத்தில் வாழும் சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தின் கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக வழங்கப்பட்டு வரும் 3.5 சதவீத உள் இடஒதுக்கீடு, தற்போதைய சூழலில் சமூகத்தின் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை.

முஸ்லிம்களின் உள் இடஒதுக்கீட்டு அளவை உயர்த்தி வழங்க வேண்டும் என தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் (TNTJ) தொடர்ச்சியாக அறப்போராட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது, தி.மு.க. தனது தேர்தல் பிரச்சாரத்தில் "முஸ்லிம்களுக்கான இடஒதுக்கீடு உயர்த்தி வழங்கப்படும்" என்ற வாக்குறுதியை அளித்து, சிறுபான்மை மக்களின் நம்பிக்கையைப் பெற்றது.

ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் 3.5 சதவீத உள் இடஒதுக்கீட்டின் பயன்கள் எந்த அளவிற்குச் சமுதாயத்தைச் சென்றடைந்துள்ளது என்பதை அரசு ஒரு வெள்ளை அறிக்கையாகவெளியிடுவதுடன், முஸ்லிம்களுக்கான உள் இடஒதுக்கீட்டை 7 சதவீதமாக உயர்த்தி தர வேண்டும். முதற்கட்டமாக 5 சதவீதம் உயர்த்தி அரசாணை வழங்க வேண்டும் என இந்த பொதுக கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்கின்றோம்

2.வந்தே மாதரம் பாடலை முழுமையாக தேசிய கீதத்திற்கு முன்னால் பாட வேண்டும் என ஒன்றிய அரசின் அரசாணை வெளியாகி உள்ளது,

வந்தே மாதரம் எனும் தேசியப்பாடல் குறித்து நீண்டநெடியவிவாதங்கள் சுதந்திரத்தின் போது நடந்து அனைத்து மதத்தினரும் உள்ள நாட்டில் ஒரு மதத்தின் கடவுள்கள் மற்றும் அடையாளங்கள் பாடலில் இருக்க வேண்டாம் எனும் அடிப்படையில் அப்பாடலில் முதல் இரண்டு பத்திகள் தவிர்த்து மற்ற பத்திகள் நீக்கப்பட்டன.

3. அஸாம் மாநில BJPயின் அதிகாரப்பூர்வ X (Twitter) தளத்தில் "Point Blank Shot" என்ற வாசகத்துடன் முஸ்லிம்களை சுட்டுத்தள்ளுவதை போன்ற வீடியோ பதிவிடப்பட்டுள்ளது. இந்த வீடியோ சமூக நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையிலும், முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான வன்முறையையும் இன 4. கடந்த 2022 முதல் 2025 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் சுமார் 636 கைதிகள் முன்கூட்டியே விடுதலை செய்யப்பட்டுள்ளதாகத் தமிழக அரசு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. தமிழக அரசின் முயற்சியால் முஸ்லிம் சிறைவாசிகள் சிலர் அண்மையில் விடுதலை செய்யப்பட்டதை தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் நன்றியுடன் நினைவு கூருகிறது.

5. தமிழகத்தின் மக்கள் தொகையில் சுமார் 7 சதவீதத்திற்கும் மேலாக வாழும் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பிரதிநிதித்துவம் என்பது, தற்போதைய சட்டமன்றத்தில் மிகக் குறைந்த அளவிலேயே இருப்பது கவலையளிக்கிறது.

234 உறுப்பினர்களைக் கொண்ட தமிழகச் சட்டமன்றத்தில், வெறும் 7 முஸ்லிம் உறுப்பினர்கள் மட்டுமே இருக்கின்றனர். இது மொத்த உறுப்பினர்களின் 3% மட்டுமே.

முஸ்லிம்கள் அரசியல் அதிகாரம் பெறும் வகையில் சட்டமன்றத்திலும், உள்ளாட்சிஅமைப்புகளிலும் மக்கள் தொகை விகிதாச்சாரப்படி உரிய பிரதிநிதித்துவத்தை வழங்க வேண்டியது அனைத்து அரசியல் கட்சிகளின் சமூகக் கடமையாகும்.

எனவே, வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில்,பாசிச சக்திகளை எதிர்க்கும் கட்சிகள் தமது வேட்பாளர் பட்டியலில் உரிய பிரதி நிதித்துவத்தை முஸ்லிம்களுக்கு வழங்க வேண்டும் என்று இப்பொதுக்கூட்டத்தின் வாயிலாக அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இந்த பொதுக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை கிளை செயலாளர் செய்யது சுலைமான், பொருளாளர் முஹமது மஜீத், துணைத் தலைவர் பெயிண்டர் முஹமதலி , துணைச் செயலாளர் J. இஸ்மாயில் , மருத்துவ அணி இமாம் அப்துல் மஜீத் தொண்டரணி மொபைல்மைதீன் மற்றும் வர்த்தக அணி அப்துல் கனி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்

பொதுக்கூட்ட நிகழ்வின் இறுதியாக நன்றியுரையை கிளை மாணவரணி செயலர் அச்சன்புதூர் சுலைமான் ஆற்றினார்.




கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர். ஸ்டாலின் தலைமையில் சுமார் 1000 போலீசார் சிவாலய ஓட்ட பாதுகாப்பு பணியில் உள்ளனர். சிவாலய ஓட்ட பக்தர்களுக்கு உதவ காவல் உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளன. காவல் உதவிமையத்தில்போலீசார்பணியில்ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பக்தர்கள்தங்களுக்குஏதேனும்உதவிதேவைப்பட்டால் அணுகலாம். மேலும் காவல் உதவி மையத்தில் குடிநீர் வசதி ஏற்பாடுகளை மாவட்ட காவல்துறையினர் செய்துள்ளனர்.

# 2026 சட்டமன்ற தேர்தலில் தூத்துக்குடியில் அதிமுக நேரடியாக போட்டியிடும்; முன்னாள் அமைச்சர் சி.த. செல்லப்பாண்டியன் பேட்டி



தூத்துக்குடி டூவிபுரம் 5வது தெருவில் அதிமுக மாநில வர்த்தக அணி அலுவலகத்தை அக்கட்சியின் மாநில வர்த்தக அணிச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சி.த. செல்லப்பாண்டியன் இன்று திறந்து வைத்தார். பின்னர்செய்தியாளர்களைச் சந்தித்து கூறியதாவது: கடந்த 2021 தேர்தலில் தூத்துக்குடி தொகுதி கூட்டணிக் கட்சிக்கு ஒதுக்கப்பட்டது. ஆனால், வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் எடப்பாடி பழனிசாமியின் ஆசியுடன் தூத்துக்குடி தொகுதியில் அதிமுக நேரடியாகப் போட்டியிடும். வரும் தேர்தலில் 234 தொகுதிகளிலும் வெற்றி பெற்று அதிமுக மீண்டும் ஆட்சி அமைக்கும். தூத்துக்குடி மீனவர் பகுதிகளில் 'தூண்டில் வளைவு' திட்டப் பணிகள் திமுக ஆட்சியில் பாதியிலேயே நிற்கின்றன. இதற்கான நிதி எங்கே போனது என்று தெரியவில்லை. இதனால் படகுகள் சேதமடைந்து மீனவர்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

"சொன்னதைச் செய்வோம்" என்ற திமுக, வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டது. அதிமுக தலைவர்களைப் பற்றிப் பேசும் விஜய்,மேடைக்குமேடை மாற்றிப் பேசுகிறார். அவர் சினிமாவில் வேண்டுமானால் 10 பேரை அடிக்கலாம், ஆனால் அரசியலில் அது எடுபடாது. "வான்கோழி ஒருபோதும் மயிலாக முடியாது." மக்கள் அவரை ஒரு நடிகராகப் பார்க்கவே கூடுகிறார்களே தவிர, அரசியல் தலைவராக அல்ல என்றார்.

இந்நிகழ்வில் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் ஆர்.எல். ராஜா, முன்னாள் மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர் சின்னத்துரை, மற்றும்கட்சிநிர்வாகிகள் கே.டி.சி.சங்கர்,ஐயப்பன், ராதா ஆனந்த் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கோவை துடியலூர் அருகே உள்ள வடமதுரை விருந்தீஸ்வரர் திருக்கோவிலில் சனி மஹாபிரதோசம் விழா விமர்சையாக நடைபெற்றது



கோவை துடியலூர் அருகே உள்ள வடமதுரை விருந்தீஸ்வரர் திருக்கோவிலில் சனி மஹாபிரதோசம் விழா விமர்சையாக நடைபெற்றது.இதில் அருள்தரும் விஸ்வநாயகி அம்பிகை உடன்மர் விருந்தீஸ்வரர் சுவாமி திருவீதி உலா நடைபெற்றது. இதில் சுற்று வட்டாரங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

சுமார் 1000 வருடங்களுக்கு மேல் பழமையான கோவை துடியலூர் அடுத்துள்ள வடமதுரை விருந்தீஸ்வரர் திருக்கோயிலில் சனி மஹா பிரதோஷம் விழா விமர்சையாக நடைபெற்றது.

முதலில் பெரிய நந்திக்கும் பின்னர் சிவனுக்கு சிறப்பு அபிசேக பூஜைகள் மற்றும் அலங்கார பூஜைகள் நடைபெற்றது. இதில் நந்திக்கு பால்,தயில்,இளநீர்,மஞ்சள், சந்தனம், திருநீர் உள்ளிட்டவைகளால் அபிசேகங்கள் நடைபெற்றன. தொடர்ந்து விருந்தீஸ்வரருக்கு சிறப்பு அபிசேக அலங்கார பூஜை மற்றும் தீபாராதனை நடைபெற்றது.

பின்னர் அருள்தரும் விஸ்வநாயகி அம்பிகை உடன்மர் அருள்மிகு விருந்தீஸ்வரர் சுவாமி திருவீதி உலா,கோவிலை சுற்றி நடைபெற்றது. இதில் இறைவனுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இந்த பூஜையில் வடமதுரை, துடியலூர், பன்னிமடை, பழனிகவுண்டன்புதூர், பூச்சியூர், தொப்பம்பட்டி, நரசிம்மநாயக்கன்பாளையம் உள்ளிட்ட பல ஊர்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம்செய்தனர்.அன்னதானம் வழங்கப்பட்டது. இந்தவிழாவிற்குஅருள்மிகு விருந்தீஸ்வரர் திருக்கோயில் அறங்காவலர் குழுதலைவர் பி.வி. மணி தலைமை வகித்தார். அறங்காவலர் குழு உறுப்பினர்கள் அம்சவேணி பழனிச்சாமி, சாமிநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் தயாநிதி குருக்கள் தலைமையில் சிவனடியார்கள் இறைவனுக்கு அபிசேக, அலங்கார பூஜைகளை செய்தனர். மேலும் மாரலக்ஸ் டெக்னாலஜீஸ் சாய் கேசவன், தனலட்சுமி, அர்ஜுன் விவேதா, அனு மற்றும் அவர்களது குடும்பத்தினர் பிரதோச பூஜைகளுக்கு ஏற்பாடு செய்தனர்.

மேலும் இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை ஆர்.டி.ஒ பழனிச்சாமி, அசோகன், வேல்முருகன், சேகர், வேலுச்சாமி, ஏ வி எம் வேல்முருகன், வெள்ளகிணர் செல்வகுமார், ரவிச்சந்திரன், தணிகைசெல்வன், மோகனசுந்தரம், விஜயகுமார், பாபு, காளிதாஸ், ஜெயபால், ராஜ்கண்ணன், சுரேஷ், சண்முகசுந்தரம், மனோகரன், விஜயகுமார், ஆடிட்டர் கிரன் ஸ்ரீ, சஷ்டி குழு ஜெயக்கொடி, கலா உட்பட பலர் செய்திருந்தனர்.

மேலும் மஹா சிவன் ராத்திரையை ஒட்டி இன்று இரவு முழுவதும் விருந்தீஸ்வரர் திருக்கோவிலில் மாலை வெள்ளி கும்மி நிகழ்ச்சி நடைபெறுகிறது. மேலும் இரவு முதல் காலை வரை 4 கால பூஜைகள் நடைபெறுகிறது.





### தூத்துக்குடி மாப்பிள்ளையூரணி ஊராட்சி பகுதியில்

# 500பேருக்கு இலவச வீட்டுமனை பட்டாவை எம்.சி.சண்முகையா எம்.எல்.ஏ.வழங்கினார்

தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் மாப்பிள்ளையூரணி ஊராட்சியில்சிறப்பு வரன்முறை திட்டத்தின் கீழ் ஆறு இடங்களில் உள்ள சுமார் 500 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கும் நிகழ்ச்சி தூத்துக்குடி மாப்பிள்ளையூரணி காமராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் மாப்பிள்ளையூரணி ஊராட்சியில் சிறப்பு வரன்முறை திட்டத்தின் கீழ் டேவிஸ்புரம், எம்.ஜி.ஆர்.நகர், மருத்துவர் நகர், காமராஜர்புரம், சுடலையாபுரம், ஆகிய பகுதிகளை சார்ந்த 500 பயனாளிக்களுக்கு ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா இலவச வீட்டு மனை பட்டாவை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வட்டாட்சியர் திருமணி ஸ்டாலின், ஒன்றிய செயலாளர் சரவணகுமார், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழுதுணைஅமைப்பாளர் ராஜேந்திரன், மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் பொன்பாண்டி ரவி, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் அந்தோணி தனுஷ் பாலன், ஒன்றிய துணை செயலாளர் கணேசன், மாவட்ட வர்த்தகர் அணி பிளோமின்ராஜ், மாவட்ட இளைஞரணி ஸ்டாலின், ஒன்றிய இளைஞரணி நெல்சன், ஒன்றிய சுற்றுசூழல் அணி ராஜேந்திரன், மகளீரணி ஆரோக்கியமேரி, கிளை செயலாளர் ஜேசுராஜ், ஜோதிடர் முருகன், சேவியர், பாரதி, தர்மலிங்கம், பொன்னுச்சாமி, இம்மானுவேல், பாரி மற்றும் கழகநிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம், கருவேலம்பாளையம் பகுதியில் உள்ள இராமசாமி கல்வி நிலையம் நிதி உதவித் தொடக்கப் பள்ளியில், நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.6.56 இலட்சம் மூலம் புதிய சத்துணவுக் கூட கட்டிட பணிகள் நிறைவு பெற்றது.இந்நிலையில், கட்டிடத்தின் தொடக்க விழாவில் ஈரோடு எம்.பி., பிரகாஷ் கலந்து கொண்டு, மாணவர்களின் நலனுக்காக அமைக்கப்பட்ட சத்துணவு மையத்தை திறந்து வைத்தார்.



ஈரோடு மாவட்டத்திற்கு (14.02.2026) வருகை புரிந்த தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி புத்தகம் வழங்கி வரவேற்றார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா, ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித்ஜெயின் ஆகியோர் உள்ளனர்.



தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, ஈரோடு கங்காபுரத்தில் உள்ள கல்வெட்டு ஆய்வாளர் எம்.எல். ராஜா இல்லத்திற்கு வருகை தந்தார். அப்போது, மொடக்குறிச்சி எம்.எல்.ஏ சி. சரஸ்வதி ஆளுநரை நேரில் சந்தித்து நினைவு பரிசு வழங்கி வரவேற்றார். இச்சந்திப்பின் போது ஈரோடு மக்களின் பண்பாட்டு பெருமைகளை ஆளுநர் நெகிழ்ச்சியுடன் பாராட்டியதோடு, அவர்களின் நலன்களையும் விசாரித்தார்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் (14.02.2026) அன்று மாவட்ட சமூக நலத்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரங்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, மாவட்ட சமூக நல அலுவலர் சண்முகவடிவு உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் கொடுமுடி வட்டம், சென்னசமுத்திரம் பேரூராட்சி, பெரியவட்டம் பகுதியில் பெருமைக்குரிய காலிங்கராயன் வாய்க்கால் மேல் புதிய பாலம் அமைக்கும் பணிக்கான பூமி பூஜை நடைபெற்றது. இந்நிகழ்வில் மொடக்குறிச்சி தொகுதி எம்.எல்.ஏ சரஸ்வதி கலந்து கொண்டு, பாலம் அமைக்கும் பணிகளை துவக்கி வைத்தார். உடன் பாஜக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.



மகா சிவராத்திரியை முன்னிட்டு தஞ்சை பெரிய கோயிலில் பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று தரிசனம் செய்தனர்

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.